**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED QUANTITY OF 1.23.0 HECTARES OF QUARRYING OF ROUGH STONE AND GRAVEL AT PALADURAI VILLAGE, MADUKKARAI TALUK, COIMBATORE DISTRICT BY M/S VARADHARAJ ROUGH STONE AND GRAVEL QUARRY ON 19.11.2021 AT 11.00 A.M AT M/S. VRV KALYANA MANDAPAM, NACHIPALAYAM, MADUKKARAI TALUK, COIMBATORE DISTRICT.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Tmt. R. Govindharajalu | : | District Revenue Officer,SRM, TASMAC<br>Coimbatore District. |
| 2 | Thiru. P. Manimaran | : | District Environmental Engineer,<br>TamilNadu Pollution Control Board,<br>Coimbatore South. |
| 3. | Tmt. Y. Beulah | : | Assistant Environmental Engineer,<br>TamilNadu Pollution Control Board,<br>Coimbatore South. |
| 4. | Tmt. T.G. Lavanya | : | Assistant Engineer,<br>TamilNadu Pollution Control Board,<br>Coimbatore South |
| 5. | Thiru. T. Selvaganapathy | : | Assistant Engineer,<br>TamilNadu Pollution Control Board,<br>Coimbatore South. |
| 6. | Thiru. A.S. Arun kumar | : | Assistant ,<br>TamilNadu Pollution Control Board,<br>Coimbatore South. |
| 7. | Thiru.V.Naveen Kumar | : | Project Proponent<br>M/s.VARADHARAJ ROUGH STONE AND GRAVEL QUARRY |
| 8. | Thiru. Vijayaragavan | : | Gr I PQ 63 KGC PS |

| | | | |
|---|---|---|---|
| 9. | Thiru. Navaneethakrishnan | : | HC 498 |
| 10. | Thiru. A. Damodharan | : | EIA consultant , Ecotech labs Pvt Ltd, Pallikaranai, Chennai – 600 100. |
| | Public | : | 31 Nos. (List enclosed as Annexure) |

*********

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South welcomed the District Revenue Officer, SRM, TASMAC Coimbatore District, Revenue Officials, all general public and project proponents who have attended the public hearing for the proposed quantity of 1.23.0 hectares of quarrying of rough stone and gravel at Karunchamigoundenpalayam Village, Madukkarai taluk, Coimbatore district by **M/s Varadharaj Rough Stone and Gravel Quarry** is required to get Environmental Clearance (EC) from the Ministry of Environment, Forest and Climate Change (MoEF &CC), Government of India. He added that the public notice informing the conducting of Public Hearing was published in "Dhinamani" and "Times of India" dated 12.10.2021 and also pointed out the EIA report and Executive summary are made available for public reference at respective Offices and informed that the project proponent would make a presentation on the proposed project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponent will be recorded through videography / Audio and the same will be sent to the Ministry of Environment, Forest and Climate Change/ State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The District Revenue Officer, SRM, TASMAC Coimbatore District, has initiated the Public Hearing process and requested the project proponent to explain about their proposed project through power point presentation about the proposed quantity of 1.23.0 hectares of quarrying of rough stone and gravel at Karunchamigoundempalayam Village, Madukkarai Taluk, Coimbatore District by **M/s Varadharaj Rough Stone and Gravel Quarry** and requested the public to

obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru. A. Damodharan, EIA Consultant, M/s. Ecotech labs Pvt Ltd, Chennai of the proposed project has made presentation about the proposed project project to the public along with Environmental Management Plan.

Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South has invited the public to express their views and comments about the proposed quantity of 1.23.0 hectares of quarrying of rough stone and gravel at Karunchamigoundenpalayam Village, Madukkarai Taluk, Coimbatore District by **M/s Varadharaj Rough Stone and Gravel Quarry**. The views and suggestions of the public's are detailed below:

1. **Mr. Nataraj, Karunchamigoundampalayam Village,**

In his speech, he said that he belonged to the village of Karunchamigaundamyalayam and asked them to provide him with sufficient financial assistance or material to complete the basic facilities as the basic facilities in their village were lacking. It was also assured that the CSR amount which could be paid from the gross profit on behalf of the management would be provided for this purpose.

2. **Mr. Karthi, Karunchamigoundampalayam Village,**

In his speech, he asked the project proponent to provide employment facilities to the villagers

3. **Mr. Balakrishnan, Karunchamigoundampalayam Village**

He said in his speech that he was a B.Com graduate and had been unemployed for three years after completing his studies and asked him to give priority to his job in the quarry accounts.

4. **Mr. Balaji, Lorry Driver,**

He said that he has been working as a lorry driver in the quarry for the last ten years and is working in a safe manner without harming the public and school going children and he hopes that if the project is implemented it will help the job seekers.

5. **Mr. Maruthachalam, Farmer, Karunchamigoundampalayam Village**

He recorded his views that the present quarry management, like the road facility provided by another quarry management operating in the Karunchamigaundampalayam area for the public, should carry out quarrying work without disturbing the public.

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography / Audio and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

List of publics attended the public hearing meeting along with photographs and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Coimbatore South.**

2/12/21
**District Revenue Officer**
**SRM, TASMAC**
**Coimbatore District**

Encl :

1. Petition received from Thiru. R. Chandrasekar.
2. Petition received from Thiru. N. Shanmugam.
3. Petition received from Thiru. R.S. Mugilan.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், கருஞ்சாமிகவுண்டம்பாளையம் கிராமம், க.ச.எண் 91/1A ல் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு வரதராஜ் ரஃப் ஸ்டோன் மற்றும் கிரேவல் குவாரி திட்டத்திற்கு கோயம்புத்தூர் மாவட்டம், நாச்சிபாளையம், வி. ஆர்.வி. திருமண மண்டபத்தில் 19.11.2021 அன்று காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.

திட்டத்தின் பெயர்

திரு வரதராஜ் ரஃப் ஸ்டோன் மற்றும் கிரேவல் குவாரி, க.ச.எண் 91/1A கருஞ்சாமிகவுண்டம்பாளையம் கிராமம், மதுக்கரை வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், (மொத்த பரப்பளவு 1.23.0 Ha )

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. R. கோவிந்தராஜுலு | : | மாவட்ட வருவாய் அலுவலர், முதுநிலை மண்டல மேலாளர் (SRM) TASMAC, கோயம்புத்தூர் மாவட்டம் |
| 2 | திரு.P. மணிமாறன் | : | மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 3. | திருமதி. Y. பியூலா | : | உதவி சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 4.. | திருமதி. T.G. லாவண்யா | : | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 5. | திரு.T.செல்வகணபதி | : | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 6. | திரு. A.S. அருண்குமார் | | உதவியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |

| | | | |
|---|---|---|---|
| 7. | திரு. V. நவீன் குமார் | | திட்ட உரிமையாளர் ( 1 எண்ணிக்கை) |
| 7. | திரு. விஜயராகவன் | : | Gr I PQ 63 KGC PS |
| 8. | திரு. நவநீத கிருஷ்ணன் | : | HC 498 |
| 10. | திரு. A. தாமோதரன் | : | சுற்று சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர், Ecotech labs Pvt Ltd, பள்ளிக்கரணை, சென்னை – 600 100. |

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், கருஞ்சாமிகவுண்டம்பாளையம் கிராமம், க.ச.எண் 91/1A ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள் வரதராஜ் ரஃப் ஸ்டோன் மற்றும் கிரேவல் குவாரி_(மொத்த பரப்பளவு 1.23.0 ஹெக்டெர்ஸ்) திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திலிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர், (SRM) TASMAC, மற்றும் வருவாய்துறை அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் வரவேற்றார். மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் 2006–ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி 8 வகையான தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும் என்பது அவசியம் என்றும், அவ்வாறு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறும் போது பொதுமக்களின் கருத்துக்களை கேட்டு அதை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கும் மற்றும் மத்திய சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கும் சமர்ப்பிக்க வேண்டுமென்பது விதியாகும். அதன்படி இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினமணி" மற்றும் "டைம்ஸ் ஆப் இந்தியா" ஆகிய நாளிதழ்களில் 12.10.2021 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததையும் மற்றும் தேவையான அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்காக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் வைக்கப்பட்டிருந்ததாக சுட்டிக்காட்டினார். மேலும், இத்திட்டம் தொடர்பாக குவாரி உரிமையாளர்களின்

சார்பாக அவருடைய திட்ட ஆலோசகர் ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் எனவும், அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும், இவையனைத்தும் ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் / தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர், (SRM) TASMAC அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் உரிமையாளர்களால் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரிகள் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

அதனை தொடர்ந்து ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. A. தாமோதரன், Ecotech Labs Pvt Ltd, பள்ளிக்கரணை, சென்னை–600100 அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்ட செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் தற்போது காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்ட இந்த ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்த பொதுமக்களின் கோரிக்கைகள் மற்றும் சந்தேகங்கள் கேட்கலாம் எனவும், கேட்கப்படும் சந்தேகங்கள் கோரிக்கைகள் வீடியோவிலும் பதிவு செய்யப்படும் எனவும் அதற்கு சட்டரீதியான விஷயங்களுக்கு திட்ட உரிமையாளர் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் பதில் அளிப்பார்கள் எனவும் கூறினார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

<u>பொதுமக்கள் கருத்துக்கள்</u> :

1. **திரு. நடராஜன், கருஞ்சாமிகவுண்டம்பாளையம் கிராமம்**

அவர் தன் உரையில் தான் கருஞ்சாமிகவுண்டம்பாளையம் கிராமத்தை சேர்ந்தவர் என்றும், தங்கள் கிராமத்தில் அடிப்படை வசதிகள் குறைவாக இருப்பதால், அடிப்படை வசதி நிறைவு செய்ய போதுமான நிதி உதவியோ அல்லது பொருளாகவோ கொடுத்திட வேண்டி கேட்டுக் கொண்டார். மேலும் நிர்வாகம் சார்பில் மொத்த லாபத்திலிருந்து அளிக்கக்கூடிய CSR தொகையினை இதற்காக வழங்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டது.

2. **திரு. கார்த்தி, கருஞ்சாமிகவுண்டம்பாளையம் கிராமம்**

இவர் தன் உரையில் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு வசதியினை ஏற்படுத்தி தருமாறு கேட்டுக் கொண்டார்.

3. **திரு. பாலகிருஷ்ணன், கருஞ்சாமிகவுண்டம்பாளையம் கிராமம்**

அவர் தன் உரையில் தான் ஒரு B.Com பட்டதாரி என்றும், தான் படித்து முடித்து மூன்று ஆண்டுகள் ஆகியும் வேலை இல்லாமல் இருப்பதாகவும் குவாரியில் Accounts சம்பந்தமாக தனக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

4. **திரு. பாலாஜி, லாரி டிரைவர்.**

தான் கடந்த பத்து வருடங்களாக குவாரியில் லாரி ஓட்டுநராக பொதுமக்களுக்கும் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கும் பாதிப்பு இல்லாமல் பாதுகாப்பான முறையில் பணியில் ஈடுபட்டு வருவதாகவும், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் வேலை வாய்ப்பிற்கு உதவும் என நம்புவதாக கூறினார்.

5. **திரு. மருதாசலம், கருஞ்சாமிகவுண்டம்பாளையம் கிராம விவசாயி**

பொதுமக்களுக்காக கருஞ்சாமிகவுண்டம்பாளையம் பகுதியில் இயங்கி வரும் மற்றொரு குவாரி நிர்வாகத்தினர் ஏற்படுத்திக் கொடுத்த ரோடு வசதியை போன்று, தற்போது அமையவுள்ள இந்த குவாரி நிர்வாகத்தினரும் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் குவாரி பணிகளை மேற்கொள்ள என்று தன்னுடைய கருத்துகளை பதிவு செய்தார்.

இறுதியாக மாவட்ட வருவாய் அலுவலர், (SRM) TASMAC அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னை–க்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவு பெற்றதாக தெரிவித்தார்.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, காணொளி, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
கோயம்புத்தூர் தெற்கு

7/12/21
மாவட்ட வருவாய் அலுவலர்
(SRM). TASMAC
கோயம்புத்தூர் மாவட்டம்.

**இணைப்பு :**

1. திரு. R. சந்திரசேகர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட மனு.
2. திரு. ந. சண்முகம் அவர்களிடமிருந்து பெறப்பட்ட மனு.
3. திரு. இரா. சா. முகிலன் அவர்களிடமிருந்து பெறப்பட்ட மனு.